


புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில், சட்டத்துறை அமைச்சரும் மாவட்டக் கழக செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையேற்று மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் சிவ.பால.இளங்கோ – சங்கீதா இல்ல விழாவை நடத்திவைத்து விழா செல்வன் இ.தங்கபாலுவை வாழ்த்தினார். மாவட்ட துணை செயலாளர் ஞான.இளங்கோவன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் ஆர்.ரெத்தினவேல், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம்,மாவட்ட பிரதிநிதி கே.வி.எஸ்.ஏ.மோகன், தொண்டரணி துணை அமைப்பாளர் எம்.கருணாகரன், அரசு கூடுதல் வழக்கறிஞர் கன்ரா. கணேஷ், மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் ஆர்.கண்ணதாசன், ஒன்றிய துணை செயலாளர் ஆர்டிஸ்ட் முருகேசன், புதுக்கோட்டை ஆ.சிவக்குமார், கே.ஆர்.வெள்ளைச்சாமி,ஆர்.முத்துகருப்பன், எஸ்.நேரு ஆகியோர் பங்கேற்று வாழ்த்தினார்கள்.



திருப்பூர் மாநகராட்சி, வார்டு எண் 23, எஸ்.ஏ.பிஸ் தியேட்டர் அருகில் 15 வது மத்திய நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.6.18 கோடி மதிப்பீட்டில் 4238 புதிய மின்விளக்குகள் பொருத்தும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தா. கிறிஸ்துராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி 4ஆம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியன், மண்டலத்தலைவர்கள் சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கால்நடை மருத்துவ தர வரிசைப் பட்டியலில் முதலிடம்

# மாணவர் ராகுல் காந்துக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

**சென்னை, ஜூலை 29 -**

**கால்நடை இளநிலை மருத்துவ தர வரிசைப் பட்டியலில் மாநில அளவில் முதலிடம் பிடித்த மாணவர் ராகுல் காந்த் அவர்களை வாழ்த்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**

மாணவர் ராகுல் காந்த் அவர்களின் கல்வி மீதான ஆர்வமும் அவரது உழைப்பும் போற்றத்தக்கது; அவரை நான் பாராட்டுகிறேன்! வாழ்த்துகிறேன்!

கல்வியின் முக்கியத்துவத்தை நான் ஒவ்வொரு முறை வலியுறுத்திப் பேசுவதும், நம்முடைய NEET எதிர்ப்பு என்பதும் ராகுல் காந்த் போன்ற மாணவர்களின் வெற்றிக்காகத்தான்!

அவருக்கு உதவ நமது அரசு இருக்கிறது. படிப்பு மட்டுமே நம்முடைய சொத்து! நிலையான புகழ்! தடைகளைக் கடந்து படிப்போம்! படிப்பால் பெருமையடைவோம்! ராகுல் காந்தின் பெற்றோருக்குப் பாராட்டுகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்டம், கீழ் கோத்தகிரி, கோடநாடு கேரடாமட்டம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பலர் உள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ. அண்ணாதுரை
### ஜூலை 29 (2014)



வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக ஆறு முறையும் – திருப்பத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராக இரண்டு முறையும், மாடப் பள்ளி கூட்டுறவு சேவை சங்கத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிநிலையின்போது கைது செய்யப்பட்டு மிசா கைதியாக சிறையில் இருந்தவர். மொழிப் போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்து அறப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

### தமிழ்நாட்டில்

# பொறியியல் படிப்பு பொதுப்பிரிவு கலந்தாய்வு தொடங்கியது!

சென்னை, ஜூலை 29-

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்புகளில் சேருவதற்கான பொதுப்பிரிவு கலந்தாய்வு தொடங்கியது. அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைப்பு பெற்ற பொறியியல் கல்லூரிகளுக்கு ஆன்லைன் வாயிலாக கலந்தாய்வு நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு விண்ணப்பித்த 2 லட்சத்து 29 ஆயிரத்து 175 மாணவர்களுக்கு பல சுற்றுகளாக கலந்தாய்வு நடத்தப்படுகிறது. சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு கடந்த 22ம் தேதி தொடங்கியது. இந்நிலையில் பொது பிரிவினருக்கான கலந்தாய்வு நேற்று காலை 10 மணிக்கு தொடங்கியது.

பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு செப்டம்பர் 3ம் தேதி வரை நடைபெறுகிறது. பொதுப்பிரிவுக்கான கலந்தாய்வு 3 கட்டங்களாக நடைபெறும். முதல் சுற்று பொது கலந்தாய்வு ஆகஸ்ட் 9ம் தேதி வரை நடத்தப்படுகிறது. 1,78,959 மாணவ, மாணவிகளுக்கான தர வரிசை பட்டியல் அண்மையில் வெளியிடப்பட்டது. www.tneaonline.org என்ற இணையதளம் வாயிலாக மாணவர்கள் கலந்தாய்வில் பங்கேற்கலாம். மொத்தத்தில் தமிழ்நாடு முழுவதும் 430 பொறியியல் கல்லூரிகளில் ஒரு லட்சத்து 57 ஆயிரத்து 378 இடங்கள் நிரப்பப்பட வுள்ளன.

தரவரிசையில் 22 ஆயிரத்து 761 இடம் வரையுள்ள மாணவர்கள் பொறியியல் பொதுப்பிரிவு கலந்தாய்வில் பங்கேற்கிறார்கள். முதல் சுற்றில் மாணவர்கள் நேற்று (ஜூலை 28) காலை 10 மணி முதல் ஜூலை 30 மாலை 5 மணி வரை விருப்ப கல்லூரிகள் மற்றும் விருப்ப பாடப்பிரிவுகளை தேர்வு செய்யலாம். வரும் 31ம் தேதி காலை 10 மணிக்குள் மாணவர்களின் விருப்ப தேர்வு அடிப்படையில் அவர்களுக்கான தற்காலிக இடம் ஒதுக்கப்படும் என பொறியியல் படிப்புக்கான மாணவர் சேர்க்கை குழு தெரிவித்துள்ளது.

### புதுக்கோட்டை மாவட்டம்

# பொன்னமராவதி பேரூராட்சியில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

புதுக்கோட்டை ஜூலை. 29-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதிகளில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் (27.07.2023) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா உடனிருந்தார்.

இதில் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், பொன்னமராவதி பேரூராட்சிப் பகுதிகளில், பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

அதன்படி, பொன்னமராவதி பேரூராட்சியில், அம்ரூத் 2.0 திட்டம் மூலம் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் அமரகண்டான் ஊரணி மேம்படுத்தும் பணியினையும் மற்றும் ரூ.2.17 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வாரச்சந்தை மேம்படுத்தும் பணியினையும் மற்றும் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு, சிவன்கோவில் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின்கீழ், ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை பணி முடிவுற்றுள்ளதை பார்வையிடப்பட்டது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற வளர்ச்சித் திட்டங்களை உரிய முறையில் பெற்று பயனடைய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, பொன்னமராவதி பேரூராட்சித் தலைவர் சுந்தரி அழகப்பன், உதவி செயற்பொறியாளர் ஜீவா சுப்பிரமணியன், பேரூராட்சி செயல் அலுவலர் மு.செ.கணேசன், பேரூராட்சி துணைத் தலைவர் வெங்கடேசன், உதவிப் பொறியாளர் செல்லமுத்து, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கல்லறையால் திருப்பிக் கொடுக்கப்பட்டவளா நீ?



மணிப்பூர் மங்கையே!
நீ கல்லறையால் திருப்பிக்
கொடுக்கப் பட்டவள் அல்ல.
பிண உலகின்
செல்லாத வாக்குச் சீட்டாய்
மணிப்பூர் மாநிலத்துக்குக் கிடைத்தவளும் அல்ல.

அழமுடியாத
இறந்தகாலம் உனக்காக அழுகிறதே
கேட்கிறதா?
பிறக்காத எதிர்காலம்
எப்படி நீ பிணமாகப் பிறந்திருப்பாய்
என்று கேட்கிறதே
தெரிகிறதா?

நிகழ்காலம்
இந்தியப் பாராளுமன்றத்து எசமானர்களோடு
தேநீர் அருந்திக் கொண்டிருக்கிறது

மாண்டுபோன
மணிப்பூர்ச் சடலத்தைச் சூழ்ந்து
மாரடித்துக்கொண்டு அ ழுகின்றன
இந்திய மாநிலங்கள்.

நிர்வாணப் படுத்தப்பட்ட
ஒவ்வொரு பெண்ணின் உடம்புக்கும்
இந்தியத்தாய்
தனது மூவண்ணக் கொடியைப் போர்த்துகிறாள்

தோற்றுத் துவண்டுபோன
மக்களாட்சியும்
கங்கையிலா யமுனையிலா காவிரியிலா
எங்கு விழும் என்று தெரியவில்லை.

மணிப்பூர்ப்பெண்ணே!
கடல்
ஆழங்களை அலைகளை நுரைகளை
வெப்பத்திலும் சினத்திலும் கொதிக்க வைத்திருக்கிறது
அந்த
வஞ்சினக் கொப்பறையில் நீ
கொடியவர்களைத்
தூக்கி வீசுவாய் என்று.

நீ துகிலுரியப்பட்ட மணிப்பூர்த் தெருக்களில்
ஆற்றாமையும் அவலமும் கண்ணீரும் அவமானமும்
கொப்பளித்துக் கிடக்கின்றன
இரண்டு சொட்டு இரங்கல் தீர்மானம்
போதும் என்றா நினைக்கிறாய்?

உன்
மூடிய கண்களுக்குள்
முடங்கிவிட்ட கண்ணீரை
அந்திமழை மேகங்கள் எக்காள இடியோடும் மின்னல்
வெடிப்போடும் வெறியோடும்
பாராளுமன்றக் கூரைமேல் எப்போது கொட்டும்?
எப்போது
இந்திய இறையாண்மை
கழுவி எடுக்கப்படும்?



கவிப்பேரருவி
**ஈரோடு தமிழன்பன்**


## சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்

### மின்னணு - ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு - உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி கோருதல்

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து, கீழ்க்காணும் பணிக்காக சென்னைக் குடிநீர் வாரியத்தில் மேற்கொள்ளும் முறைப்படி ஒரு உறையில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000க்குட்பட்டு இ-ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

| வ. எண். | ஒப்பந்தப்புள்ளியின் பெயர் மற்றும் எண் | ஒப்பந்த முன் வைப்புத் தொகை | தகுதி | மின்னணு ஒப்பந்த சமர்ப்பிப்பு இறுதி தேதி | மின்னணு ஒப்பந்த திறக்கப்படும் தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு இரண்டு ஆண்டுக்கான சமூக ஊடக மேலாண்மை. சமூக மறுமொழி மேலாண்மை, உள்ளடக்க உருவாக்கம் மற்றும் முன்னேற்ற ஆக்க முயற்சிக்காக புதிய தகவல் தொடர்பு நிறுவனத்தை தேர்வு செய்யும் பணி ஒம்/குநீர்/ செகுவா/3552/2023-24 | ரூ.65,300/- | ஒப்பந்த ஆவணத்தில் உள்ளபடி | 16.08.2023 அன்று பிற்பகல் 3.00 மணிவரை | 17.08.2023 அன்று பிற்பகல் 3.00 மணிக்குப் பிறகு |

2. ஒப்பந்த முன் வைப்பு தொகையை இணையவழி பரிவர்த்தனையாக இணையதளத்தின் மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்கள் இணையவழியில் ஒப்பந்த முன் வைப்பு தொகையை செலுத்தியதற்கான ஸ்கேன் செய்யப்பட்ட நகலை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டும்.

3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் இ - ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கலாம். பிற அனைத்து விவரங்களையும் 31.07.2023 வரை இணையதளத்தில் வெளியாகும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.

செ.ம.தொ.இ./4124/ஒப்பந்தப்புள்ளி/2023

மேற்பார்வை பொறியாளர், (ஒப்பந்தம் மற்றும் கண்காணிப்பு)

"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"